**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

EA.1/2022 in EP.95/2021

சாட்சி : PW–1

பெயர் : கார்த்திகா தேதி: 19.03.2025

**குறுக்கு விசாரணை:–**

எனது அப்பா ஜவ்வரிசி வியாபாரம் செய்தார். எனது அம்மாவும் அந்த ஜவ்வரிசி வியாபாரத்தில் ஒரு பங்குதாரரர் என்றால் சரிதான். ஜவ்வரிசி வியாபாரத்தில் எனது அம்மாவிற்கும், அப்பாவிற்கும் தனிதனியாக வருமானம் வரும் என்றால் எனக்கு தெரியாது. ராஜபிரியா எண்டர்பிரைசஸ் என்பது தான் எனது பெற்றோர் சேர்ந்து நடத்திய ஜவ்வரிசி கம்பெனி என்றால் அது எனக்கு தெரியாது. 2017 இல் எனது பெற்றோர் பார்ட்டனராக இருந்த ராஜபிரியா எண்டர்பிரைசஸ் கம்பெனி மீது சேலம் குற்றப்பிரிவு போலிசாார் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அதனால் இந்த கேள்விக்கு நான் பதில் அளிக்க விரும்பவில்லை.

எனது அம்மா கோகுலம் சிட்சில் சிட்டில் சேர்ந்திருந்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் எனக்கு அடமானம் ( MOD) எழுதிகொடுத்திருந்தது தெரியும். மேற்படி எம்ஓடி 10 லட்சம் கடனுக்கு என் அம்மா எழுதிகொடுத்திருந்தார். எனது அம்மா சீட் தொகை எடுக்க மேற்படி எம்ஓடி எழுதிகொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. எனது அம்மா கோகுலம் சிட்சில் ரூ.25 லட்சம் மதிப்புள்ள இரண்டு சீட்டில் சேர்ந்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த சீட்டில் எனது அம்மா சந்தாதரராக இருந்தார் என்றும் எனது அப்பா பிணைதாரராக இருந்தார் என்றும் அந்த சீட்டில் சீட் தொகை எடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

எனது அம்மா சீட் எடுத்த பணத்தை திரும்ப செலுத்ததால் மத்திய சென்னை மாவட்ட சீட் நிதி வழக்குகள் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் கொடுத்த அவார்டு படி தான் இந்தநிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.181/2021 என்ற வழக்கை நான் தான் தாக்கல் செய்தேன். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். நான் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன்.

அ.வ.எண்.262/2021 என்ற பாகப்பிரிவினை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் அ.வ.எண்.181/2021 ம் மற்றும் அ.வஎண்.262/2021 ம் தாக்கல் செய்தது பற்றி சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி இரண்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் மேல்முறையீடு செய்துள்ளேன். நிறைவேற்று மனுவில் எவ்வளவு தொகை கேட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.

முதல்விசாரணை வாக்குமூலத்தில் நிறைவேற்று மனு தொகையை எனக்கு தெரியாமல் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பே வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். அது எத்தனை நாட்களுக்கு முன்பு என்று எனக்கு சரியாக நினைவில்லை. நான் எம்ஓடி ரூ. 10 லட்சம் தொகையை வட்டியுடன் கொடுத்துவிட்டு சொத்தை திரும்ப பெற்றுக்கொள்ள மனு தாக்கல் செய்துள்ளேன்.

என் மனுவிற்கு எதிர்மனுதாரர் என்ன பதில் சொல்லியுள்ளார் என்று எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

Sd/- L. Kalaivani,
III Additonal District Judge,
Salem.

**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

EA.2/2023 in EP.97/2021

சாட்சி : PW–1

பெயர் : கார்த்திகா தேதி: 19.03.2025

**குறுக்கு விசாரணை:–**

எனது அப்பா ஜவ்வரிசி வியாபாரம் செய்தார். எனது அம்மாவும் அந்த ஜவ்வரிசி வியாபாரத்தில் ஒரு பங்குதாரர் என்றால் சரிதான். ஜவ்வரிசி வியாபாரத்தில் எனது அம்மாவிற்கும், அப்பாவிற்கும் தனிதனியாக வருமானம் வரும் என்றால் எனக்கு தெரியாது. ராஜபிரியா எண்டர்பிரைசஸ் என்பது தான் எனது பெற்றோர் சேர்ந்து நடத்திய ஜவ்வரிசி கம்பெனி என்றால் அது எனக்கு தெரியாது. 2017 இல் எனது பெற்றோர் பார்ட்டனராக இருந்த ராஜபிரியா எண்டர்பிரைசஸ் கம்பெனி மீது சேலம் குற்றப்பிரிவு போலிசாார் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அதனால் இந்த கேள்விக்கு நான் பதில் அளிக்க விரும்பவில்லை.

எனது அம்மா கோகுலம் சிட்சில் சிட்டில் சேர்ந்திருந்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் எனக்கு அடமானம் ( MOD) எழுதிகொடுத்திருந்தது தெரியும். மேற்படி எம்ஓடி 10 லட்சம் கடனுக்கு என் அம்மா எழுதிகொடுத்திருந்தார். எனது அம்மா சீட் தொகை எடுக்க மேற்படி எம்ஓடி எழுதிகொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. எனது அம்மா கோகுலம் சிட்சில் ரூ.25 லட்சம் மதிப்புள்ள இரண்டு சீட்டில் சேர்ந்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த சீட்டில் எனது அம்மா சந்தாதரராக இருந்தார் என்றும் எனது அப்பா பிணைதாரராக இருந்தார் என்றும் அந்த சீட்டில் சீட் தொகை எடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

எனது அம்மா சீட் எடுத்த பணத்தை திரும்ப செலுத்ததால் மத்திய சென்னை மாவட்ட சீட் நிதி வழக்குகள் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் கொடுத்த அவார்டு படி தான் இந்தநிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.181/2021 என்ற வழக்கை நான் தான் தாக்கல் செய்தேன். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். நான் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன்.

அ.வ.எண்.262/2021 என்ற பாகப்பிரிவினை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் அ.வ.எண்.181/2021 ம் மற்றும் அ.வஎண்.262/2021 ம் தாக்கல் செய்தது பற்றி சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி இரண்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் மேல்முறையீடு செய்துள்ளேன். நிறைவேற்று மனுவில் எவ்வளவு தொகை கேட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.

முதல்விசாரணை வாக்குமூலத்தில் நிறைவேற்று மனு தொகையை எனக்கு தெரியாமல் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பே வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். அது எத்தனை நாட்களுக்கு முன்பு என்று எனக்கு சரியாக நினைவில்லை. நான் எம்ஓடி ரூ. 10 லட்சம் தொகையை வட்டியுடன் கொடுத்துவிட்டு சொத்தை திரும்ப பெற்றுக்கொள்ள மனு தாக்கல் செய்துள்ளேன்.

என் மனுவிற்கு எதிர்மனுதாரர் என்ன பதில் சொல்லியுள்ளார் என்று எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

Sd/- L. Kalaivani,
III Additonal District Judge,
Salem.